[2015 செப்டம்பர் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கல்லூரி துவங்க வேண்டுமென்று சொன்னால், கிராமப் பகுதியாக இருந்தால் 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நிலம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்க வேண்டுமென்று சொன்னால், தொடரும் செலவு என்ற வகையில் பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் சம்பளம் போன்றவற்றிற்கு 95 இலட்சம் ரூபாயும், தொடராச் செலவு என்ற அடிப்படையில் கட்டடம் கட்டுவதற்கு, கணினிகள், மேஜைகள், நாற்காலிகள் போன்ற தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கு 7 கோடியே 25 இலட்சம் ரூபாயும் ஓர் ஆண்டிற்குத் தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்தில் நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 296, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

296—

நியாய விலைக் கடை

***49405—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரம் நகராட்சி 18, 19, 20 மற்றும் 21 ஆம் வார்டுகளில் நியாய விலைக் கடைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் விதிமுறைகள் பூர்த்தியாகாத நிலையில், இராமநாதபுரம் தொகுதி, இராமநாதபுரம் நகராட்சி 18, 19, 20 மற்றும் 21 ஆகிய

2015 செப்டம்பர் 18]

வார்டுகளுக்குத் தனியாக நியாய விலைக் கடைகள் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இராமநாதபுரம் நகராட்சியில் 18, 19 மற்றும் 20 ஆகிய மூன்று வார்டுகளுக்கும் AB 003 R3 என்ற நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இதிலே சுமார் 1,500 குடும்ப அட்டைகள் உள்ளன. இதில் 20-வது வார்டு, அருப்புக்காரத் தெருவில் மட்டும் 500 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. அங்குள்ளவர்கள் ஏறத்தாழ ஒரு கிலோ மீட்டர் தூரம் சென்று பொருட்கள் வாங்க வேண்டிய நிலை இருக்கின்றது. எனவே, இந்த R3 கடையைப் பிரித்து தனியாக 20-வது வார்டு, அருப்புக்காரத் தெருவிற்கு ஒரு நியாய விலைக் கடை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் நகராட்சியில் வார்டு எண் 18-ல் சின்னக் கடைத் தெரு அங்காடியும், வார்டு எண் 19 மற்றும் 20-ல் அருப்புக்காரத் தெரு அங்காடியும், வார்டு எண் 21-ல் புள்ளிகாரன் தெரு அங்காடியும் இயங்கி வருகின்றன. இந்த நான்கு வார்டுகளைச் சேர்ந்த 11 தெருக்களில் வசிக்கும் குடும்ப அட்டைதாரர்கள் இந்த மூன்று அங்காடிகளிலும் தற்போது அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர். இந்த அட்டைதாரர்கள் வசிக்கும் தெருக்கள் அனைத்தும் மேற்கண்ட அங்காடிகளிலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாகவே அமைந்திருப்பதால், இங்கு தனியாக பகுதிநேரக் கடைகள் அமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வார்டு எண் 20-ல்

அமைந்திருக்கக்கூடிய அருப்புக்காரத் தெருவில் 500/-க்கும் மேற்பட்ட குடும்ப அட்டைகள் இருப்பதாகச் சொன்னார்கள். 20-வது வார்டில் அமைந்திருக்கிற அருப்புக்காரத் தெருவில் 129 குடும்ப அட்டைகள்தான் தற்போது இருக்கின்றன. சிவஞானபுரத்தில் 152, தாம்பூரணிச்சந்தில் 130, ஆக மொத்தம் 411 குடும்ப அட்டைகளுக்கு 20-வது வார்டில் ஒரு கடை செயல்பட்டு வருகிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். சுற்றியுள்ள பகுதிகளுக்கு அரை கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளாகவே கடை இருக்கிறது என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கடை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அது சொந்தக் கட்டடத்தில் இயங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன். மண்டபம் ஒன்றியம், காராண் ஊராட்சியில் இயங்கும் ஏ.பி. 38 கடையைப் பிரித்து, மேட்டுக்காரன் கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைக்க வேண்டிய ஒரு சூழல் இருக்கின்றது. ஏனென்றால், இந்த மேட்டுக்காரன் கிராமத்தில் வாழக்கூடிய மக்கள் சுமார் 3 கிலோ மீட்டர் தூரம் தலைச்சுமையாக இந்தப் பொருட்களை எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. எனவே, அங்கே ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு, இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 20-வது வட்டத்தில் அமைந்திருக்கின்ற கடை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது; அதற்கு சொந்தக் கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்

2015 செப்டம்பர் 18]

பார்வைக்கு எடுத்துச் செல்லப்படும். மாநிலத்தில் இருக்கக்கூடிய அனைத்து அங்காடிகளும் சொந்தக் கட்டடத்தில் இயங்க வேண்டும் என்பதற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், மேட்டுக்காரன் கிராமத்தில் பகுதிநேரக் கடை அமைத்துத் தருவதற்கான வாய்ப்பு இருக்கின்றதா என்றும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். இராமநாதபுரம் மாவட்டத்தில் இதுவரை 50 பகுதிநேரக் கடைகள் புதியதாகத் திறக்கப்பட்டுள்ளன. இது மிகப் பெரிய எண்ணிக்கை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்மட்டும், 50 புதிய பகுதிநேர அங்காடிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. தற்போது 558 முழுநேர அங்காடிகள், 217 பகுதிநேர அங்காடிகள் என மொத்தம் 775 அங்காடிகள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இயங்கி வருகின்றன. இவை அனைத்திலும் பொருட்கள் சீராக வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 290, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

290—

சித்த மருத்துவக் கல்லூரி

***34365—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோவில்பட்டி தொகுதி, குருமலை மலைப் பகுதிக்கு அருகில் அரசு சித்த மருத்துவக் கல்லூரி துவக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?